**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.428/2022**

**தேதி : 28.10.2025**

**(வா.சா.1 ) – திருமதி. தனலட்சுமி**

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை :– (1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில்)**

1. வழக்குச்சொத்து என்னுடைய கணவருக்கு அவரது தகப்பனார் வழியில் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கேரள மாநிலத்தை பூர்வீகமாகக் கொண்டவர் என்றால் சரிதான். பிரதிவாதியின் உறவினர்கள் யாரும் இங்கு இல்லை என்றால் சரிதான். என்னுடைய மகன் ஜெயப்பிரகாஷ்–க்கும் 1ம் பிரதிவாதிக்கும் பெரியோர்களால் பார்த்து நிச்சியக்கப்பட்டு 2015ம் வருடம் திருமணம் நடந்தது என்றால் சரிதான். என்னுடைய இளைய மகன் ஜெயப்பிரகாஷ்–க்கு திருமணம் முடிந்து நானும், என் மகன் ஜெயப்பிரகாஷ்–ம், 1ம் பிரதிவாதியும் ஒரே குடும்பமாக இருந்தோம் என்றால் சரிதான்.

2. என்னுடைய இளைய மகன் ஜெயப்பிரகாஷ் எப்படி இறந்தார் என்றால் இருதய வலி காரணமாக இறந்தார். ஜெயப்பிரகாஷ் உயிருடன் இருந்த காலத்தில் அவரது கணவரையும் என்னையும் நன்றாக கவனித்து வந்தார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியான என்னுடைய பேரனை என் மகன் ஜெயப்பிரகாஷ் இருக்கும் வரை நான் நல்லமுறையில்தான் பார்த்து வந்தேன் என்றால் சரிதான். என்னுடைய மருமகள் சுபா என்னுடன் நல்லமுறையில்தான் இருந்து வருகிறார் என்றால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள செட்டில்மெண்ட் ஆவணம் என் வசம்தான் உள்ளது.

3. தாவாச்சொத்து விபரம் தெரியும். தாவாச்சொத்தின் சர்வே எண் எனக்கு ஞாபகமில்லை. தாவாச்சொத்து விவசாய நிலம். அதற்குத்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனக்கு மூன்று வாரிசுகள். அவர்கள் பெயர் ஆனந்தராஜ், சுதாமணி, ஜெயப்பிரகாஷ். நான் ஜெயப்பிரகாஷ்–க்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்தேன். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ய நான் வேறு எங்கும் மனு தாக்கல் செய்யவில்லை. நான்

சொல்லியுள்ள வீடு பிரதிவாதியின் கட்டுப்பாட்டில் இல்லை என்றால் சரிதான். விவசாய நிலத்தையும் பிரதிவாதிகள் அனுபவித்து வரவில்லை என்றால் சரிதான். நான் வழக்கில் சொல்லியுள்ள சொத்தைப் பொறுத்து நான் உயிருடன் இருக்கும் காலம் வரை பிரதிவாதி தொல்லை செய்வது இல்லை என்று கூறியுள்ளார் என்றால் தானசெட்டில்மெண்ட் நான் எழுதிக்கொடுத்தது என்பதால் அவர் அவ்வாறு கூறியுள்ளார்.

4. பிரதிவாதிகள் தங்களுக்கு ஆதரவு இல்லை என்பதால் 1ம் பிரதிவாதியின் பெற்றோர் இருக்கும் கேரளாவிற்கு சென்றுவிட்டதாகச் சொன்னால் சரிதான். பக்கத்து நிலத்தை சேர்ந்தவருக்கு தாவாச்சொத்தை விற்க 1ம் பிரதிவாதி ஏற்பாடு செய்தார். அவரது பெயர் தெரியாது. 1ம் பிரதிவாதிக்கு இங்கு யாரையும் தெரியாது என்றும், அவர் தாவாச்சொத்தை விற்க முயற்சிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனது இளைய மகன் ஜெயப்பிரகாஷுக்கும், எனக்கும் எனது மகள் சுதாமணி பாகபாத்தியவிடுதலை ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என் மூத்த மகன் ஆனந்தராஜ் எனது கணவரும், ஜெயப்பிரகாஷும் உயிருடன் இருக்கும்போது மொத்த சொத்துக்களையும் சேர்த்து ஒரு பொது பாத்திய விடுதலை ஆவணத்தை எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் உறவுமுறையில்லை ஆகும் என்று எழுதிக்கொடுத்துள்ளார். அதற்காக ஆனந்தராஜ் பிரதிப்பலன் பெற்றுக்கொண்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. ஆனந்தராஜ் பிரதிப்பலன் பெற்றுக்கொண்டதாக வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. எனது இளைய மகன் ஜெயப்பிரகாஷ் இறந்தபின்புதான் எனது மூத்த மகன் ஆனந்தராஜ் எங்கள் வீட்டிற்கே வந்தார் என்றால் எனது மகன் ஜெயப்பிரகாஷ் இறந்தபோது வந்தார், அவர் தனியாகத்தான் இருந்து வருகிறார். பிரதிவாதிகள் தற்போதுவரை என்னுடன் நல்ல உறவில்தான் இருந்து வருகிறார்கள் என்று சொன்னால் நான் உணவிற்கே வழியில்லாமல் இருந்து வருகிறேன். 1ம் பிரதிவாதி எனக்கு எவ்வித தொல்லையும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகளை அலைக்கழிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா இடம் சம்பந்தமாக என்னுடைய மருமகள் சுபா யாரிடமும் ஒப்பந்தம் செய்யவில்லை என்று சொன்னால் விற்பதற்கு ஏற்பாடு செய்து வருகிறார். 1ம் பிரதிவாதி விற்க முயன்றுவரும் சங்கதி மற்றவர்கள்

சொல்லித்தான் எனக்கு தெரியுமா என்றால் இடத்தைப் பார்க்க 1ம் பிரதிவாதி ஆட்களை அழைத்து வந்ததை நானும் பார்த்தேன்.

6. தாவாச்சொத்தில் எனது மூத்த மகன் ஆனந்தராஜ் செங்கற்சூளைக்கு மண் எடுத்ததாகச் சொன்னால் எனக்கு கடன் இருப்பதால் நான்தான் மண் அள்ளினேன். மண் எடுத்ததற்கும், பிரதிவாதிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான். என்னுடைய மூத்த மகன் ஆனந்தராஜ் தாவாச்சொத்து சம்பந்தமாக தனியாக பழனி முதன்மை சார்பு நீதிமன்றத்தில் என்னையும் சேர்த்து ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. பழனி முதன்மை சார்பு நீதிமன்றத்தில் எனது மூத்த மகன் ஆனந்தராஜ் வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றும், மேற்படி வழக்கின் நீதிமன்ற அழைப்பாணையை பெற்றுக்கொண்டு நான் மேற்படி வழக்கில் வேண்டுமென்றே தோன்றாத்தரப்பினராக இருந்து வருவதாகச் சொன்னால் சரியல்ல. பொய்யான காரணங்களை கூறி, பிரதிவாதிகளை அலைக்கழிப்பு செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

7. எனது மருமகள் சுபா தனது இளவர் மகனை வைத்துக்கொண்டு வாழ்வாதாரத்திற்கு கஷ்டப்படுவதாகச் சொன்னால் சரியல்ல. செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்வதற்காக நான் கோட்டாட்சியரிடம் மனு கொடுத்து அந்த மனு தள்ளுபடியாகவிட்டது என்றால் மனு கொடுத்தேன், தள்ளுபடியான விபரம் தெரியவில்லை. கோட்டாட்சியர் பிரதிவாதிகளை வரவழைத்து விசாரித்ததில் இளைய மகன் ஜெயப்பிரகாஷ் இறந்தபின்பு 1ம் பிரதிவாதி எவ்வித தொல்லையும் கொடுக்கவில்லை என தெரிவித்து எனது மனுவை தள்ளுபடி செய்துவிட்டார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வேறு திருமணம் செய்துவிட்டார். அவ்வாறான திருமணத்திற்கு நான் சென்றேனா என்றால் இல்லை. மேற்படி செய்தி 1ம் பிரதிவாதியின் சித்தி சொல்லித்தெரியும். மேற்படி சங்கதியை வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

8. வழக்குச்சொத்தைப் பொறுத்து பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் செய்யவில்லை என்றால் சரியல்ல. மூவரும் சேர்ந்து விற்கலாம் என அழைத்தபோது 1ம் பிரதிவாதி அதற்கு மறுத்துவிட்டார். பிராது பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** **இல்லை.**

Taken down by me in open court and
read over to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2025.10.28 19:10:55 +0530

Additional Sub Judge,
Palani.